★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 19உ திங்கள் (2—7—56) ★ ★ வெளியூர்: ஆனி 20உ செவ்வாய் (3—7—56) [இதழ் 15

மேலும் ரூ. 111 கோடி ஒதுக்க வேண்டுமாம்!

முஸ்சோரி, ஜுன் 30—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக் கொண்டு விவசாயப் பொருள் உற்பத்தியில், 8 இலட்சம் டன்தான் உயர்வு ஏற்படுத்த முடியும் என்றும், 164 இலட்சம் டன் உயர்வு உண்டாக்க இன்னும் ரூ. 111 கோடி ஒதுக்கவேண்டுமென்றும், அது இயலாதெனில், இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள நிதியை மூன்றாண்டுகளில் செலவு செய்ய அனுமதித்து, அதன் பின்னர் தேவைக்கேற்றபடி நிதி ஒதுக்கலாம் என்றும் மாநில விவசாய அமைச்சர்கள் மாநாடு தீர்மானித்துள்ளதெனத் தெரிகிறது.

ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்:

ஆண்டையை தப்புவிக்க அடிமையின் முயற்சி

திட்டம் சிறிதானாலும் கலக்கமுறத் தேவை இல்லையாம்

இன்று சிறிதானாலும் பின்னர் விரிவாகக் கூடுமாம்

அன்று 'வீர கர்ச்சனை' புரிந்த சுப்பிரமணியம் இன்று 'முகாரி' பாடுகிறார்

'தேவிகுளம் பீர்மேடு விவகாரத்தில் ஏமாந்ததுபோல ஏமாற மாட்டோம்—இந்த இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி பெறுவதில்; மக்கள் தொகை அடிப்படையில், இந்த மாநிலத்திற்கு இரண்டாம் திட்டத்தின்கீழ் ரூ. 200 கோடிக்கும் அதிகமாக ஒதுக்கியாக வேண்டும். அதை திட்டக்குழுவிடம் எப்படியேனும் பெற்றே தீருவோம்' என்று, 'வீரகர்ச்சனை' புரிந்தார், கோவைக் குமரன், நிதிமந்திரி சுப்பிரமணியம்!

சட்டசபையில் 'இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும்வேண்டும்' எனக் கோரினார்! 'நியாயமான அளவு பெற்றே தீருவோம்' என்று சல்லடம் கட்டினார்!!

ஆனால், இன்று?........'வீர கர்ச்சனை' எல்லாம் 'முகாரி'யாக மாறியிருக்கிறது.

'மக்கள் தொகை அடிப்படையில் இந்த மாநிலத்திற்கு ரூ. 220 கோடி ஒதுக்கப்பட வேண்டும்' என்று, இப்போதும் கூறுகிறார், அந்த நீதி—நிதி, படிப்பு அமைச்சர்!

ஆனால்...........!

திட்டக்குழு இன்னும் இதற்குச் சம்மதிக்கவில்லை!

அப்படி சம்மதிக்காததற்காக நாம் ஒன்றும் கலங்கத் தேவை இல்லையாம்! பேசியிருக்கிறார், நிதியமைச்சர்!

'கலங்க வேண்டாம்' என்று கூறுவதற்கு காரணம் என்ன கூறுகிறார் தெரியுமா?

திட்டத்தின் அளவு எப்படியிருந்தாலும், அது மாநில சர்க்கார், திட்டங்களை அமுல் செய்வதற்குப் பெற்றிருக்கிற நிர்வாக இயந்திரத்தைப் பொறுத்ததாம்! மேலும், இந்த மாநில மக்களிடமிருந்து திரட்டக் கூடிய நிதியையும் அது பொறுத்ததாம்!

'எனவே, ஒவ்வொரு ஆண்டும் திட்டம் பற்றி பரிசிலனை செய்யப்படும். அப்படிச் செய்யும்போது, அவசியமேற்பட்டால் திட்டத்தின் அளவை விரிவாக்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் நாம், இப்போது வேலை செய்ய வேண்டும்' என்றும் 'சமாதானம்' கூற முற்பட்டிருக்கிறார், சுப்பிரமணியம்!

இப்போது இவர் கூறுகிற காரணங்கள், 400 கோடி ரூபாய் வேண்டும்—என்று டில்லியிடம் கேட்டபோது, இவருக்குத் தெரியாமல் போயிற்று என்று, நாட்டு மக்கள் கேட்பார்களே என்ற அச்சம் துளிக்கூட இருந்ததாகத் தெரியவில்லை, இந்த மந்திரிக்கு!

'தென்னாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகக் குறைவானது' என்பதைசட்டசபையில் இவரே பேசியிருக்கிறார். இன்று, டில்லி இழைத்த அநீதிக்கு அவரே, சமாதானம் கூற முன்வருகிறார்.

'எசமானர்'களை, குற்றவாளிக் கூண்டிலிருந்து தப்புவிக்க முயற்சித்துப் பார்க்கிறார், பரிதாபம்! பரிதாபம்!!

—நிதியமைச்சர் சுப்பிரமணியம், வானொலியில், 'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்'பற்றிய சொற்பொழிவுத் தொடரைத் துவக்கி வைத்துப் பேசுகையில்தான், இந்த மாதிரி எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்.

ரூ. 30 கோடிவரையில் வருமான வரி ஏய்ப்பு!

மத்திய சர்க்கார் மதிப்பீடாம்!

பம்பாய், ஜூலை 1—

ஆண்டிற்கு ரூ 30 கோடிவரையில் வருமான வரி தராமல் ஏமாற்றப்படுவதாக மத்திய சர்க்கார் மதிப்பிட்டுள்ளதாக, மத்திய வருவாய்த்துறை அமைச்சர் எம். சி. ஷா கூறியுள்ளார்.

இராணுவத்திடம் உணவு இலாகா நிர்வாகம்!

டாக்கா, ஜுன் 30—

கிழக்கு பாகிஸ்தானில் உணவு இலாகா நிர்வாகம் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படுகிறதென அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

தென்னாட்டிற்கு வடவர் இழைத்த அநீதி ஓரளவுக்கே சரியானதாம்

மந்திரி சுப்பிரமணியம் சப்பைக்கட்டு!

சென்னை, ஜூலை 1—

தொழில் அபிவிருத்தி சம்பந்தமான ஏற்பாட்டில், தென்னாட்டிற்குரிய முக்கியத்துவம் தரப்படவில்லை என்ற புகார் ஓரளவுக்குத்தான் சரியாக இருக்க முடியுமாம்!

தென்னாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இரசாயன உரத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குத் திட்டங்களும், உத்தேச செலவு சம்பந்தமான புள்ளி விபரங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றனவாம்!

நீர்விசை மின்சார உபயோகத்தைப் பயன்படுத்துவதற்கு 2 இலட்சம் கிலோவாட் மின்சார சக்தியை விநியோகம் செய்யக்கூடிய 'தெர்மல்' நிலயத்தை ஏற்படுத்துவதற்கும் திட்டம் தயாராகி வருகிறதாம்!

சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் இரும்புக் கனிகளையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் பயன்படுத்தி ஒரு எஃகுத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்து வருகிறதாம்! நடப்புத் திட்டத்தில் இது சாத்தியப்படாவிட்டாலும், பின்னர் இது சாத்தியமாகிவிடுமாம்!

இந்தத் திட்டக் காலத்திலேயே பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட தொழில்களைத் துவக்குவதற்கு ரூ. 60 கோடி முதலீடு செய்வதற்கு இந்திய சர்க்கார் வழிகோலியுள்ளனராம்!

'செயல் முறையில் இந்தத் திட்டங்கள் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையுடன் நாம் இருப்போமாக' என்று, நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம், சென்னை வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜூலை 7: பொது வேலை நிறுத்தம்

மேற்கு வங்க சர்வ கட்சி முன்னணி அறிவிப்பு

வங்கப் பகுதிகள் பீகாரில் இணைக்கப்படுவதின் எதிரொலி

கல்கத்தா, ஜூலை 1—

பீகாரில் உள்ள வங்க மொழி வழங்கும் பகுதிகளில் ஒரு பிரிவை மட்டும் மேற்கு வங்கத்துடன் இணைத்துவிட்டு, எஞ்சிய பகுதிகளை பீகாரிலேயே விட்டுவைக்க டில்லி செய்த முடிவு மேற்கு வங்கத்திற்கு இழைக்கப்படும் அநீதி என்றும், அந்த அநீதியைத் துடைக்க மேற்கு வங்க மாநிலம் முழுவதும் ஜூலை 7-ந் தேதியன்று கடையடைப்பு, பொது வேலைநிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் மேற்கு வங்க மொழிவழி மாநில அமைப்பு முன்னணியினர் மக்களை கேட்டுள்ளனர்.

இந்த முன்னணி, மேற்கு வங்கத்தில் உள்ள இடதுசாரிகளால் அமைக்கப்பட்டிருப்பதாகும்.

இந்த முன்னணியினர்தான், வங்கம் பீகார் இணைப்பை எதிர்த்து கடந்த பிப். 24-ல், மேற்கு வங்க மாநிலமெங்கும் அர்த்தால் நடத்தி வெற்றி கண்டனர் என்பது நினைவிலிருக்கலாம்

ஆர்.எம்.எஸ். ஊழியர் போராட்டம் முழு வெற்றி

1,200 ஊழியர்கள் இன்று சம்பளம் வாங்க மறுப்பு

★

(நமது நிருபர்)

சென்னை, ஜூலை 2—

மீனம்பாக்கம் விமான நிலயத்தில் உள்ள அஞ்சல் பிரிப்பகத்திற்குச் சென்று வருவதற்கு ஊழியர்களுக்குத் தரப்பட்டுவந்த போக்குவரத்துப் படி இந்த ஆண்டுத் துவக்க முதல் நிறுத்தப்பட்டதை எதிர்த்து, சென்னை ஆர். எம். எஸ் அஞ்சல் பிரிப்பக ஊழியர்கள் சுமார் 1,200 பேர், இன்று ஒரு நாள் சம்பளம் வாங்க மறுத்துள்ளனர்.

ஊழியர்கள் எல்லாம், இன்று தங்கள் கோரிக்கையை எடுத்துக் காட்டும் சின்னங்கள் அணிந்து கொண்டு வேலை செய்கின்றனர்.

சென்னை சென்ட்ரல், எழும்பூர், மீனம்பாக்கம் விமான நிலயம் ஆகிய அஞ்சல் பிரிப்பக அலுவலகங்களைப் போலீசார் வளைய வளையச் சுற்றி வந்துகொண்டிருக்கின்றனர்.

சிரித்த முகத்தோடு, ஒற்றுமை குலையாமல், ஊழியர்கள் இன்று சம்பளம் வாங்க மறுத்துவிட்டனர் என்று ஊழியர் சங்கப் பிரமுகர் ஒருவர் என்னிடம் கூறினார்.

சர்க்கார், ஊழியர்களின் இந்த ஒருமுகமான நடவடிக்கைக்குப் பின்பேனும், ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முந்துவதே விவேகமானதாயிருக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

ஆகாத ஆலோசனை?

இந்தூர், ஜுன் 29—

பல்கலைக் கழகப் படிப்புக்கு மாணவர்கள் கூட்டம் கூட்டமாக படையெடுப்பதை குறைக்கும் எண்ணத்துடன், சர்க்கார் துறை வேலைகளுக்கு அதிகப் பட்ச வயது 25 என்று நிர்ணயித்துள்ளதை 20 - ஆகவோ அல்லது 19 ஆகவோ குறைப்பதுபற்றி இந்தியப் பேராசிரியர் தீவிரமாக ஆலோசித்து வருகின்றனராம்.

தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவானேன்?

புதுடில்லி, ஜூன் 30—

பர்மாவிடமிருந்து ரஷ்ய சிமெண்டை இந்தியா வாங்குவது சிமெண்டின் விலையைப் பொறுத்திருப்பதாகத் தெரிகிறது. ரஷ்யாவிடமிருந்து நேரடியாக வாங்குவதைவிட இந்தச் சிமெண்டுக்கு பர்மா அதிக விலை கேட்பதாகக் கூறப்படுகிறது.

மின்சார வெட்டு நீங்குகிறது

உதகை, ஜுன் 30—

பருவ மழையின் காரணமாக மற்றொரு சிறந்த பலன் கிடைத்திருக்கிறது.

இரண்டு மாத காலமாக இருந்து வந்த மின்சார வெட்டு நீங்குகிறது.

பைகாரா, மூக்குர்தி நீர்த்தேக்கங்களில் தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளதால், ஜூலை 1-ந் தேதியிலிருந்து மின்சார வெட்டை நீக்குவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறதென அறிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது 25-சதவிகிதம் மின்சார வெட்டு அமுலில் இருக்கிறது.

வருமானம் குறித்த அத்தாட்சிப் பத்திரங்கள்

சென்னை, ஜூன் 29—

1955—56ல், சென்னை கல்வி விதிகளுக்கிணங்க கல்விச் சலுகை பெற விரும்பும் மாணவ - மாணவிகளின் பெற்றோரின் வருமானம் சம்பந்தமாக, உத்தியோகப் பற்றற்றவர்கள் 'சர்ட்டிபிகேட்'டுகள் வழங்கிவந்தது போலவே, 1956—57ம் ஆண்டிலும் இந்தச் 'சர்டிபிகேட்'டுகளை வழங்கலாமென அரசியலார் உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

ஓயவில்லை — ஒழியவில்லை!

பம்பாய், ஜூலை 1—

பம்பாய் நகரில் சம்யுக்த மாராட்டிரத்தை ஆதரித்து பல்வேறிடங்களில் ஏறக்குறைய 300 பேர் சத்தியாக்கிரகம் செய்தனரென்றும், இவர்களை போலீசார் பிடித்துச் சென்று பின்னர் விடுவித்தார்கள்.

நம் நாடு

சென்னை 2—7—'56 திங்கள்

முரண்பட்ட வாழ்க்கை முறை!

சாதிப் பாகுபாடு ஒரு கொடிய சமுதாய ஏற்பாடு. ஆரிய சனாதன சண்டாளத்தனத்தின் உருபலன்.

சாதி அமைப்பு, ஒவ்வொரு மனிதனுடைய விவேகத்தையும், வீரத்தையும் கருவறுத்துவிடக் கூடியது. ஒற்றுமையை ஒழித்து வேற்றுமையை உருவாக்கிப் பேணிக்காத்து வரக் கூடியது.

குறிப்பிட்ட ஒரு சாதியை மற்றொரு சாதியினர்மீது ஏவிவிட்டு, பொது சமுதாய வளர்ச்சிக்கு உலைவைக்கக் கூடியது.

சாதி பாகுபாட்டில், மனிதனை மனிதன் தோழனாகவோ, சோதரனாகவோ கொண்டு பழகும் பண்பு வளருவதற்குப் பெரிதும் இடம் கிடையாது.

சாதிப் பாகுபாட்டில் பழகிவிட்ட காரணத்தால், தாழ்ந்த சாதியினர் எனக் கூறப்படுவோரில் பெரும் தொகையினர், தங்களைக் குறித்துத் தாழ்வாகக் கருதிக் கொள்ளுகின்றனர். அது ஒரு மனப்பழக்கமாகவும் போய்விட்டது.

அதன் பலனாக, வாழ்க்கைத் துறைகளிலும், தங்களுக்கென குறிப்பிட்ட வரையறையை உருவாக்கிக் கொண்டுள்ளனர்.

அதுபோன்றே, சாதிப்பாகுபாட்டில் உயர்நிலையில் உள்ளதாகச் சொல்லப்படுபவர்களிடமும், தங்களைக் குறித்து உயர்வாகக் கருதிக்கொள்ளும் போக்கு படிந்துவிட்டது. அது, மனப்பழக்கமாகவும் மாறிவிட்டது.

அதன் விளைவாக, வாழ்க்கைத் துறைகளில் தங்களுக்கு, மற்றப் பெரும்பாலோருக்கு இல்லாத தனிச் சலுகைகள், தங்களுக்கு மட்டுமே உண்டு எனக் கூறவும், அச்சலுகைகளைப் பெற்று சுவையாக வாழ்க்கை நடத்தவும் அவர்கள் துணிகிறார்கள்.

தாழ்த்தப்பட்டோர் எனப்படுவோர் கொண்டுள்ள குறை மதிப்புத் துணை உணர்வு தொலைந்தாக வேண்டும். அதுபோலவே, உயர்நிலையிலிருப்பவர் எனக் கூறப்படும் குணக்கேடர்களைப் பற்றிக் கிடக்கும் உயர்மதிப்பு துணை உணர்வும் ஒழிக்கப்படல் வேண்டும்.

அவரவர் நிலையில் இருந்து பார்த்தால்தான், இவ்விரு வகையான துணை உணர்வின் விளைவுகளை, ஒருவரால் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

பண பலம், கல்வி பலம், அதிகார பலம் போன்ற ஒன்றுதான், சாதிப் பாகுபாட்டால் ஒருவருக்கு ஏற்படுகின்ற பலமும்—பலக் குறைவும்.

'எட்டி நில்' என ஒருவரைப் பார்த்துக் கூறும் ஒருவரின் துணிவில் உறைந்திருக்கும் பலத்தையும், அந்த அதிகாரக் குரலுக்கு ஒருவர் அடங்கிவிடுவதால் உள்ளடங்கிக் கிடக்கும் பலக்குறைவும், மேற்காட்டிய உண்மைகளை உறுதிப்படுத்துவனவாகும்.

எனவே, சாதியில் உயர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்ளுகிறவர்களுக்கு, அவ்வாறு தங்களை உயர்த்திக்கூறிக்கொள்வதிலிருந்தே, ஒரு புதிய பலம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அதுபோன்றே, சாதியில் தாழ்ந்தவர்கள் எனக் கருதிக் கொள்ளுபவர்களுக்கு; அத்தகைய புதிய பலம் ஏற்படாது போவதுடன், மற்றவர்களிடம் இருப்பதுபோல் சராசரி பலத்திலும் குறைவு ஏற்பட்டு வருகிறது.

உயர் சாதியினர் எனப்படுவோர், சாதியின் பெயரால் ஒரு புதிய பலத்தைப் பெறுகின்றனர்.

தாழ்ந்த சாதியினர், அப்புதிய பலத்தைப் பெருததுடன், தங்களுக்கு இயல்பாக இருக்கும் பலத்திலும் சிறிதளவு—இல்லை—பெரிதளவு இழந்துவிடுகின்றனர்.

இத்தெளிவான உண்மையைத் தெரிந்திருக்கின்ற காரணத்தினால், டாக்டர் அம்பேத்கார், ஜெகஜீவன்ராம் போன்றவர்கள், சாதிப் பாகுபாடு—சனாதனம் தொலைவதற்குமுன் தீண்டாமை தொலையாது என, வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் முழக்கமிடுகின்றனர்.

சனாதனம் தொலைக்கப்பட வேண்டும் எனக் கர்ச்சிக்கின்றனர்.

ஆனால் உயர்சாதியினரோ, சாதியால் தங்களுக்கு எந்த விதச் சிரமமும் இல்லாமல் வலியக் கிடைக்கும் பலத்தை இழக்க விரும்பாதவர்களாய், சாதி ஒழியக்கூடாது என ஊளையிடுகிறார்கள்.

சனாதன ஏற்பாடு—வேதக் கட்டளை; கீதையின் சாரம்; ஆண்டவன் தந்தது எனப் பழைமையைச்சான்றுக்கழைக்கிறார்கள்.

சாதி ஒழிய வேண்டும்; பிறப்பினால் உயர்வு-தாழ்வு பேசுவது தொலைய வேண்டும் எனக் கோருபவரை, சமரசம் பேசுபவரை, வகுப்புவாதிகள்—நாத்திகர்கள்—நாட்டுத் துரோகிகள் என நாத்தழும்பேறத் தூற்றுகின்றனர்.

சாதி இருக்க வேண்டும்—ஆனால் சாதிப் பூசல் — சாதி நினைப்பு கூடாது எனப் புலம்புகிறார்கள். இப்புலம்பலைத் துவங்கி இருக்கிறார், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார்.

சங்கராச்சாரியார்களும் இதைத்தான் செய்து வருகிறார்கள்.

சங்கராச்சாரியார் சமயத் துறையில் உலாவுகிறார்—ஆச்சாரியார் அரசியல் துறையில் ஆடிப்பாடி வருகிறார்.

ஆனால்இருவரும, சாதி காப்பாறறப்பட வேண்டும் என்ற இடத்தில் ஒன்று கூடுகின்றனர்—இரண்டறக் கலந்து நிற்கின்றனர்!

சாதியைக் குறிக்கும் பெயர்களை எவரும் குறிக்காதிருக்கும் வகையில் சட்டம் ஒன்று இயற்றப்போவதாக, சென்னை அமைச்சர் பரமேசுவரன் அவர்கள், விநோபா பாவேயிடம் அறிவித்துள்ளதாகச் செய்தி தரப்பட்டிருக்கிறது.

எதிர்பார்க்கும, பலன் குறிப்பிட்ட அந்தச் சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறுமா என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

அதே நேரத்தில், சிருங்கேரி சங்கராச்சாரியார், சனாதனதர்மத்தின் உயர்வு பற்றியும், அது காப்பாற்றி வரப்படுவதின் அவசியம் பற்றியும் கொச்சின்-சித்தூரில் போதித்துள்ளார்.

உபநயனம்—அதாவது பார்ப்பனப் பிள்ளைகள் பூணூல் அணிந்துகொள்வதற்கு, பெரும அளவில் நிதி உதவப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

அமைச்சர் பரமேசுவரன் சாதிப் பெயரை ஒழிக்க சட்டமியற்றப் போவதாகக் கூறுகிறார்!

சிருங்கேரி சங்கராச்சாரியாரோ, சாதிப் பாகுபாட்டை நிலைநிறுத்தச் செய்யும் பூணூல் சூட்டலுக்கு நிதி உதவ முன்வருகிறார்!

அமைச்சர் முயற்சி, நவீன சனநாயகப் பண்பு.

சங்கராச்சாரியின் முயற்சி, ஆத்மீக பாரதப் பண்பாடு!

முரண்பட்ட இரண்டு வாழ்க்கை முறைகள்!

தொழிலாளர்களுக்கு நியாய ஊதியம்

நிர்ணயிப்பதற்கு இந்திய சர்க்கார் முன்வரும்?

புதுடில்லி, ஜூன் 29—

தொழிலாளர்களுக்கு நியாய சம்பளம் கிடைக்க வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்து, பல்வேறு தொழில்களுக்கும்ஊதிய 'போர்டு'கள் ஏற்படுத்த இந்தியப் பேரரசினர் யோசித்து வருவதாக தெரியவருகிறது.

நாட்டின் உற்பத்திப் பெருகியிருந்தும் தொழிலாளர்களின் சம்பளமோ அல்லது வேலை வாய்ப்புகளோ கணிசமாக உயரவில்லை என்றும், எனவே, சம்பளங்களை உயர்த்தவேண்டுமென்றும் பாராளுமன்றத்திலும், வெளியிலும் கோரிக்கைகள் நிலவுவது தெரிந்ததே!

ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு!

"துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் தருவதற்கு முன்வந்தால், மாநில சர்க்கார்களுக்கு அதிகப்படியாக ஏற்படும் செலவில் பாதியை மத்திய சர்க்கார் தரும்; பயிற்சி பெருத துவக்கப்பள்ளி ஆசிரியருக்குக் குறைந்தபட்சம் ரூ. 40; பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ. 50 கொடுக்கவேண்டும்; இது நியாயமானது என்றே தோன்றுகிறது,"

என்று, மத்திய துணைக் கல்வியமைச்சர் கே. ஸ்ரீமாலி பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் கூறியுள்ளார்.

3,000 பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர் ஊர்வலம்

கோரிக்கைகளை சர்க்காருக்கு உணர்த்த நடவடிக்கை

சென்னை, ஜூன் 29—

கிராக்கிப் படி மறுப்பு, டாக்டர் சர்டிபிகேட்'டுடன் எல்லாச் சந்தர்ப்பங்களில் காருண்யப் படி மறுப்பு போன்ற பிரச்சினைகளில் தங்களுடைய குறைகளைத் தெரிவிப்பதற்காகவும், அரசாங்க'இன்ஷ்யூரன்ஸ்' சட்டத்தை மீறும் முதலாளிமீது சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தவறுவதும் குறித்து கண்டனத்தைத் தெரிவிக்கவும், சென்னை பி அண்டு சி ஆலைத் தொழிலாளரில் சுமார் 3,000 பேர் கொண்ட ஊர்வலம் தோழர் எஸ். சி. சி. அந்தோணிப் (பிள்ளை) தலைமையில் ஆலையிலிருந்து புறப்பட்டு அரசாங்க அலுவலகத்துக்குச் சென்றது; அங்கிருந்து மீண்டும் ஆலைக்குத் திரும்பியது.

மரண தண்டனை ஒழிப்பு மசோதா

இங்கிலாந்து மக்கள் சபை நிறைவேற்றியது

லண்டன், ஜூன் 29—

கொலைக் குற்றத்திற்குத் தூக்குத் தண்டனை வழங்கும் முறையை ரத்து செய்கிற மசோதா இங்கிலாந்து மக்கள்சபையில் நிறைவேறிவிட்டது.

மசோதாவிற்கு ஆதரவாக 152 வாக்குகளும், எதிராக 133 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன; 19 வாக்குகள் அதிகம் பெற்று மசோதா நிறைவேற்றப்படும்போது, இந்தத் தூக்குத் தண்டனை ஒழிப்புக்காகப் பாடுபட்டவர்கள் பேராரவாரம் செய்திருக்கின்றனர்.

இந்த மசோதாவிற்கு இருந்த கடைசித் தடையும் முறியடிக்கப்பட்டது.

ஏற்கனவே ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒருவன் கொலை புரிந்தால், அந்தக் குற்றத்திற்கேனும் மரண தண்டனை விதிக்க வேண்டும் என்ற ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்த திருத்தத்தையும் 23 வாக்குகள் அதிகம் பெற்று முறியடித்திருக்கின்றனர், தொழிற் கட்சியினர்!

இம்மசோதா, இப்போது பிரபுக்கள் சபைக்குச் செல்கிறது.

சர்க்கார் இந்த மசோதாவைத் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறார்கள். மரண தண்டனைதான் கொலைக் குற்றத்திற்கு உகந்த தண்டனை என்றும், அது, சிறை அதிகாரிகள் முதலானவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதாயும் சர்க்கார் கூறிவந்திருக்கின்றனர்.

ஆனாலும், இந்த விவகாரம் ஒவ்வொருவரின் மனச்சாட்சியைப் பற்றியது என்பதால், கட்சிக் கட்டுப்பாடு விதிக்காமல், ஒவ்வொருவரும் தம்மிச்சையாக வாக்கு அளிக்க அனுமதிக்கப்பட்டனர்; அதனால்தான் தொழிற் கட்சியினர் கொண்டுவந்த இந்த மசோதா நிறைவேறியுள்ளது.

பிரபுக்கள் சபையில் இந்த மசோதாவை எதிர்ப்பவர்களே நிரம்ப இருக்கின்றனர்.

ஆனால் அவர்கள், மசோதாவை ஒழித்துவிட முடியாது; வேண்டுமானால், ஓராண்டு காலத்திற்கு ஒத்திவைக்கலாம்.

ஸ்டாலின் கால 'தவறு'கள்

குருஷ்சேவும் இதரரும் கூட்டுப் பொறுப்பாளிகளே!

அமெரிக்க கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை

'கிரெம்லின் சர்வாதிகார உறுப்பினர்களும், ஸ்டாலினுடைய கொடுஞ்செயல்களுக்குப் பொறுப்புடையவர்களே' என்று, அவர்களைக் கடுமையாகக் குறைகூறுவதில் அமெரிக்கக் கம்யூனிஸ்டு கட்சியும் சேர்ந்துவிட்டது.

'ஒரு தனி ஆள் தான்தோன்றித்தனமாக, எவ்வளவுதான் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அளவுக்குத் தவருக விடப்பட்டிருந்தாலும் சரி, அந்தத் தனி மனிதருடைய மனம்போன போக்கான குறைபாடுகளே அத்தகைய தவறுகளுக்கெல்லாம் காரணம் என்று கூறும் ஆராய்ச்சியை' அமெரிக்கக் கம்யூனிஸ்டுகள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று, அவர்களுடைய அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் பீட்ரோ னென்னியும் அநேகமாக இதே போன்ற தாக்குதலில் இறங்கி, 'சோவியத் தலைவர்கள் ஸ்டாலினுடைய செயல்களை அச்சத்தினால் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள்' என்ற குருஷ்சேவ் விளக்கத்தைச் சரியானதன்று எனப் புறக்கணித்துவிட்டார்.

'குருஷ்சேவ் தெரியப்படுத்தியுள்ள படுகொலைகளுக்கு ஸ்டாலின் மட்டுமல்ல—தலைமையிலிருந்த எல்லோருமே பொறுப்பாளிகள் என்பது தெளிவு,' என்று அவர் கூறினார்.

'சோஷலிச ஜனநாயகம், நீதி, சர்வ தேசீயம் ஆகியவற்றின் அத்தகைய புரட்டுகள் எவ்வாறு விருத்தியடைந்து, இருபது வருடங்களாகக் கட்டுப்பாடின்றி எவ்வாறு வளர்ந்தன என்பதற்கு அடிப்படையான ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று சோவியத் கட்சித் தலைமையை, அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை கேட்கிறது.

இரயில்வே முன்னேற்றம்

இவ்வாண்டின் முதல் ஐந்து மாதங்களில் அமெரிக்காவில் முதல் தரமான இரயிலவேக்களுக்கு மொத்தம் 661 புதிய எஞ்சின்கள் செய்யப்பட்டுள்ளனவாம்!

குடும்ப வருமானப் பெருக்கம்

1955-ல், அமெரிக்கக் குடும்பங்களின் வருமானம் என்றுமில்லாத நிலையில் அதிகமாகி விட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

ஐந்தாண்டு உழைப்பினால்!

கிழக்கு ஜெர்மனி, டில்லியில் நடைபெற்ற இந்தியத் தொழில் கண்காட்சியில், 'கண்ணாடி மனிதனை'க் காட்டியது நினைவிலிருக்கலாம்; இப்போது, ஐந்தாண்டு உழைப்பின் பலனாகச் சுகாதாரப் பொருட்காட்சியினர், கண்ணாடிக் குதிரை ஒன்றைச் செய்துள்ளனர்; விசேடமான 'பிளாஸ்டிக்'கினால் குதிரையின் தோல் செய்யப்பட்டுள்ளது; உடலை மட்டும் நிர்மாணிக்க 590 கிலோ மீட்டர் கம்பிகள் தேவைப்பட்டதாம்!

இந்தக் கண்ணாடிக்குதிரை மிருக வைத்தியர்களுக்குப் பெரும் பயனளிக்கும் என்று குறிப்பிடப்படுகிறது.

பிரிட்டன் 'ஆதிக்கம்' அழிந்துவிட்டது?

பம்பாய், ஜூன் 29—

சென்ற இரண்டாண்டுகளில் இந்தியாவின் தொழில் திட்டங்களில் பிரிட்டன் ரூ 347 கோடி முதலீடு செய்திருப்பதாகவும், மற்ற எல்லா நாடுகளும் சேர்ந்து இந்தியாவில் முதலீடு செய்துள்ள தொகையைக் காட்டிலும் பிரிட்டன் ஐந்து மடங்கு அதிகமான முதலீடு செய்துள்ளதாகவும், விரைவில் மேலும் ரூ. 100 கோடி முதலீடு செய்ய பிரிட்டன் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேயாவில் பிரிட்டிஷ் தளங்கள்

கோலாலம்பூர், 28—

மலேயா சுதந்திரம் பெற்ற பின்னர், பிரிட்டிஷ் படைத் தளங்களை அங்கு வைத்திருப்பதற்கு வேண்டிய நிலப்பரப்பும், மற்ற வசதிகளும் நீண்டகால குத்தகையாக தரப்படலாமென்றும், எல்லா சுல்தான்களும், பிரதமர் அப்துல் ரெஹ்மானும், பிரிட்டிஷ் ஹைகமிஷனரும் கலந்துகொண்ட கூட்டத்தில் இம்முடிவு செய்யப்பட்டதென்று தெரியவருகிறது.

தொழிலாளர் கோரிக்கை—ஏற்க நிர்வாகிகள் மறுப்பு

லண்டன், ஜூன் 29—

வாரம் நாற்பது மணி நேரம் வேலை வேண்டுமென 25 இலட்சம் பிரிட்டிஷ் எஞ்சினீயரிங் தொழிலாளர்களின் கோரிக்கையை நிர்வாகிகள் ஏற்க மறுத்துவிட்டனர் என்றும், இப்பொழுது 44 மணி வேலை வாரம் நடைபெறுகிறதென்றும் தெரியவருகிறது.

கழகச் செய்திகள்

கோவை மாவட்ட தி. மு. கழக செயற்குழு

தீர்மானங்கள்

கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம் 24-6-56 காலை 10 மணியளவில், திருப்பூர் வாலிபாலையம் ராலே கிட்டிங் கம்பெனியில், மாவட்டச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெற்றது அதுபோது, பின்வரும் முடிவுகள் செய்யப்பட்டன.

கோவை மாவட்டத்தின் சார்பில் பொதுக் குழுவில் காலியாக இருக்கும் இடத்திற்கு, திருப்பூர் தோழர் சு துரைசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கோவை மாவட்டத்தில் பொதுத் தேர்தல் சம்பந்தமான தஸ்தாவேசுகளைச் சேகரிக்கக் கீழ்க் கண்ட மூவரைக்கொண்ட குழு நியமிக்கப்பட்டது :—எஸ். ஏ இராசமாணிக்கம் ; கோவை-செழியன் ; சி. டி தண்டபாணி.

கோவை மாவட்டத்திலுள்ள கிளைகளில் ஏற்படும் தகராறுகளை விசாரித்து மாவட்டச் செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கக் கீழ்க் கண்டவர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது :—எஸ் அப்பாவு ; பி. என். இராமானுசம் ; வி சண்முகநாதன் ; உடுமலை-நாராயணன்.

கோவை மாவட்டக் கழக அலுவலகத்தைத் தற்காலிகமாகக் கோவை நகரில் வைத்துக்கொள்வதெனவும், கோவை மாவட்டக் கழகத்திற்கு 'டேப்ரிக்கார்டு' இயந்திரம் ஒன்று வாங்கலாமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை—மயிலாப்பூர் தி. மு. கழகம்

23-6-56 இரவு 10 மணிக்கு தோழர் ஏ. இராதாகிஷ்ணன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களின் தந்தை அழகிரியின் துணைவியார்; தோழர் சி குப்புசாமி அவர்களின் தந்தை ஆகியோர் இயற்கை யெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டது. பின்னர், கழக ஆண்டு விழாவை நூலை இறுதிக்குள் நடத்துவதென முடிவு செய்யப்பட்டு, கழக வரவு-செலவு சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பட்டது.

குள்ளக்காபாளையம் தி. மு. கழகம்

15—6—56 இரவு 8 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் நடராசன் தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், அழகிரியின் வாழ்க்கைத் துணைவியார் எத்திராசு அம்மையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப் பட்டதுடன், 1—4—56 முதல் 31—5—56 வரையுள்ள வரவு—செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

சென்னை 27-வது வட்ட தி. மு. கழகம்

24-6-56 பிற்பகல் 3 மணியளவில் சென்னை 27-வது வட்டம், பூங்காநகர், அனுமந்தராயன் கோயில் தெரு, 32 எண் தோழர் ஆ இராசன் மனையில், தி. மு. கழகம் பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் பா. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் ஆ. இராசன், அன்புமணி ஆகியோர் நாட்டு சிறப்பினை விளக்கிப் பேசினர். பின்னர் செயற் குழு உறுப்பினர்களாக தோழர்கள் சீ. தியாகராசன், பி ஜி. கண்ணப்பா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கல்லார் எஸ்டேட் தி. மு. கழகம்

மேற்படி கழகத்தின் உறுப்பினர் கூட்டம் தோழர் சே. பி. மருதமுத்து தலைமையில் நடைபெற்றது; தோழர் சே. பி பிச்சைமுத்து கழக வளர்ச்சிக் குறித்தும், மாநில மாநாட்டு முடிவுகள் குறித்தும் விளக்கவுரை யாற்றினர்.

அம்மையநாயக்கனூர் தி. மு. கழகம்

26—6—56-ல், கழகச் செயற்குழு உறுப்பினர் கூட்டம் தோழர் இரா. அ. பரமசிவம் தலைமையில் நடைபெற்றபோது, பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவது பற்றியும், முதலாவது ஆண்டு விழா வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப் பட்டும், கழக வளர்ச்சிக்கு நிதி திரட்டுவது என்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

'பயங்கரவாதி'கள் மீது!

100 டன் குண்டுகள் பொழியப்பட்டனவாம்

சென்ற வாரம் தென் மலேயாவிலுள்ள ஜோகோர் மாநிலத்தில், கம்யூனிஸ்டு பயங்கரவாதிகள் மீது 100 டன் குண்டுகள் போடப்பட்டதாக பிரிட்டிஷ் விமானப்படை அறிவித்ததாம்.

'ஜெட்' விமானங்கள், வேட்டை விமானங்கள் உள்பட 35 விமானங்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனவாம்.

விதிகள் மாறுது!

இந்திய நிர்வாக 'சர்வீஸ்' (தனி நியமன) தேர்வு விதிகள் மேலும் தளர்த்தப்படமாட்டாது என மத்திய உள்நாட்டிலாகா அறிவித்திருக்கிறது.

செங்கற்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளன மாநாடு

காஞ்சீபுரத்தில் நடைபெறும்

"1956 ஜூலை 29-ந்தேதி காலை காஞ்சிபுரத்தில், செங்கற்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் 'பெடரேஷன்' மாநாடு கூடுகிறது. அதுபோது, 'பெடரேஷனி'ன் எதிர்கால வேலைத் திட்டங்கள், தாழ்த்தப்பட்டோரின் அரசியல் பற்றிய முக்கிய விஷயங்கள் ஆலோசிக்கப் பட்டு, தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்டோர் நிலை உயர சீர்திருத்த முறைகளும் வகுக்கப்படும்; ஆதலால் ஆதியர் பிரதிநிதிகள் அனைவரும் அவரவர் ஆலோசனைகளையும், தீர்மானத் திட்டங்களையும் உதவிகளையும் உடனடியாக நமக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேம்.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், எப்படித் தாழ்த்தப்பட்டோர் ஏமாற்றப்பட்டனர்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தாழ்த்தப்பட்டோரை வஞ்சிக்க எப்படி சூழ்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது — என்பதை, மாநாடு எடுத்துக் காட்டும். காங்கிரசைப் பொதுத் தேர்தலில் எதிர்க்கும் எந்தெந்தக் கட்சிகளுக்கு ஆதரவுகொடுப்பது போன்ற மிக முக்கியப் பிரச்சினைகள் மாநாட்டில் முடிவு எடுக்கப்படும்.

"இம்மாநாடு வெற்றிபெற, எல்லாத் தாழ்த்தப்பட்டோரும், இம்மக்கள்பால் அனுதாபமுள்ளவர்களும் ஆதரவு தர வேண்டுகிறேம்"

என்று, த நா. தா. 'பெடரேஷன்' தலைவர் தோழர் ஏ இரத்தினம் எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிக்கிறார்

மருத்துவமனை மறந்தனர்-மந்திரத்தை நம்பினர்!

ஐயப்பனை நம்பியதும் வீணாயிற்று!

பாம்பு கடிக்கு சிறுவன் பலி

நாகர்கோவில், ஜூன் 30—

ஒரு சிறுவனை நல்லபாம்பு கடித்துவிட்டது. பாம்பு கடித்த இந்தச் சிறுவனுக்கு மருத்துவம் செய்யாமல், மந்திரம் செபித்தார்களாம். மந்திரத்தினால் மாங்காய் விழுமா? சிலமணி நேரத்திற்குள் சிறுவன் இறந்துவிட்டான்.

இது பற்றிக் கூறப்படுவதாவது :—

கடுக்கரை கவுண்டர் குடும்பத்தைச் சேர்ந்த கணபதி என்ற சிறுவன், ஒரு அழகான பொன்வண்டை வளர்த்துவந்தான். இந்தப் பொன்வண்டிற்கு ஆகாரம் கொடுக்கும்பொருட்டு சில தினங்களுக்கு முன்பு கணபதி, கொழுந்து பறிக்கச் சென்றான்; அங்கு, ஒரு நல்லபாம்பு கணபதியின் கால் பெருவிரலைக் கடித்துவிட்டது. கணபதி உடனே, 'பாம்பு! பாம்பு' என்று அலறினான்.

சிறுவனின் இந்தச் சத்தத்தைக் கேட்ட சிலர் ஓடிவந்து பார்த்தனர். பாம்பு கடித்துவிட்டது என்று தெரிந்ததும் சிறுவனின் உடம்பில் விஷம் ஏறிவிடாமல் இருப்பதற்காக அங்கு வந்தவர்கள் அவனது முழங்காலில் நன்றாகக் கட்டுப் போட்டனர்.

பின்பு கணபதி, அவனது வீட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டான். பெற்றோர்கள் மிகவும் ஏழைகளானதால் அவனை கடுக்கரை ஐயப்பன் கோவிலுக்குக் கொண்டு சென்றார்களாம். அங்கு சிறுவனுக்கு ஏதோ மந்திரம் ஓதப்பட்டதாம். மந்திரம் ஓதிய பின்னர் சிறுவன் காலில் கட்டப்பட்டிருந்த கட்டுகள் அவிழ்க்கப்பட்டது. இதன்பின், கணபதியை அவனது பெற்றோர்கள் வீட்டிற்கு கொண்டுசென்றனர்.

வெகு நேரத்திற்குப் பின்பு கணபதியின் தாயார் அவனது காலை தொட்டுப் பார்த்தாள். கால் 'ஜில்' என்று குளிர்ச்சியாக இருந்தது. என்னமோ, ஏதோவென்று பயம் பிடித்ததாய், உடனே தனது மகனை ஒரு வண்டி மூலம் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றாள்; சிறுவனை டாக்டர் சோதனை செய்தார்; ஆனால் என்ன பயன்! பையன் இறந்து சில மணி நேரங்களாகிவிட்டது, 'இனி ஒன்றும் செய்ய முடியாது' என்றார் டாக்டர் இதை கேட்ட பெற்றோர்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, 'மந்திரத்தை நம்பி ஏமாந்து போனோமே?' என்று அழுது புலம்பினர். பின்னர், இறந்துபோனகணபதி அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டான்.

72 பேர் பலி!

அல்ஜீரியர்ஸ், ஜுன் 28—

சென்ற இரண்டு நாட்களில் மேற்கு அல்ஜீரிய மலைகளில் 72 தேசியவாதிகளைப் பிரெஞ்சுப் படைகள் சுட்டு வீழ்த்தியதாக அறிவிக்கப்படுகிறது.

செய்திச் சுருள்

★

திரு. வி. க. இலக்கிய மன்றம்

தமிழ் வித்துவான் வகுப்பு

சென்னை திரு. வி. க. இலக்கிய மன்றச் சார்பில், இரண்டு ஆண்டுகளாய் நடைபெற்றுவரும் தமிழ் வித்துவான் வகுப்பு 9-7-56 முதல் துவக்கப்பட்டு வண்ணை, சர். தியாகராயர் கல்லூரியில் நடைபெறும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் வித்துவான் 'புகுமுகத் தேர்வு' இடைநிலைத் தேர்வு'க்கான வகுப்புகள் திரு மா. இராசமாணிக்கம் (தமிழ்த்துறை தலைவர், தியாகராயர் கல்லூரி) அவர்களை முதல்வராகக்கொண்டு, தமிழ்ப் புலவர் பதின்மரால் நடத்தப்படும்.

வாரத்தில் திங்கள் முதல் சனிக்கிழமை வரை ஐந்து நாட்களில் மாலை 6 மணி முதல் 8 மணிவரை வகுப்பு உண்டு. தமிழ்ப் படிக்க விரும்பும் ஆசிரியர்களும், ஆண்களும், பெண்களும் வகுப்பில் சேர்ந்து பயன் பெறுமாறு வேண்டுகின்றேம்.

மேலும் விளக்கம் வேண்டுவோர், கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும் :—தி. ரா. செல்வராசன் செயலாளர்; 61. சஞ்சீவிராயன் கோயில் தெரு, சென்னை-21.

மறுமலர்ச்சி நூல் நிலையம்

24—6—56 காலை 10 மணியளவில், சென்னை 39-வது வட்ட மறுமலர்ச்சி நூல் நிலையப் பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் பால்வண்ணன் தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—தலைவர்: முருகுமார்; செயலாளர்: மு. மாரிமுத்து; துணைச்செயலாளர்: சு அரங்கநாதன்; பொருளாளர்: மு. வீரராகவன். நிர்வாகக் குழு உறுப்பினர்களாகத்தோழர்கள்: வாணன் தயாளன், தாடமணி, அ. இராசு, டி. சானகிராமன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரை மஜீத் நினைவுப் படிப்பகம்

24-6-56-ல் படிப்பகத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது :—செயலாளர்: ச. எமராசன் ; துணைச்செயலாளர் : கே. ஆர். கே. தினகர்; பொருளாளர் : ஏ. தங்கமணி; பொறுப்பாளர்: வீ. மாரிக்கனி; விளம்பரம்: பி எஸ் இரத்தினம்; செயற் குழு உறுப்பினர்கள்: வி. சு. மணி, டி. சின்னசாமி.

பாண்டியன் நாடக மன்றம்

24—6—56 மாலை 5 மணிக்கு, சென்னை - திருவல்லிக்கேணி கே. எஸ் பாண்டியன் படிப்பகப் பணிமனையில், பாண்டியன் நாடக மன்றத் துவக்க விழா தோழர் எஸ். எஸ். தென்னரசு தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் வளையாபதி முத்துக்கிருட்டினன், மா. பா. சாரதி, எம் கே. மணி, இ. மு. நெடுமாறன் கோ. தாமோதரன், எல். கோபால் 'தென்றல் திரை' பத்மநாபன் ஆகியோர் மன்றத்தைப் பாராட்டிப் பேசினர். தோழர் நெல்லை கபிலன் நன்றி நவின்றார்.

* * *

18—6—56ல் நடைபெற்ற நாடக மன்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், நாடக மன்ற நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : சண்பகவேல் ; துணைச் செயலாளர் : இரா இளம்பரிதி ; பொருளாளர் : எஸ் வி. வேலு ; பொறுப்பாளர் : நெல்லை - கபிலன்.

புதுக்கோட்டை சர்க்கார் கடைநிலை ஊழியர் சங்கம்

25-6-56 இரவு 7 மணியளவில், நகர பாங்கு மாடியில் சென்னை மாநில சர்க்கார் கடைநிலை ஊழியர்கள் சங்க புதுக்கோட்டை கிளையின் இரண்டாம் ஆண்டு விழா தோழர் ஜி எபினேசர் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். ஐ. நூர்முகமது அனைவரையும் வரவேற்றுப் பேசினர் தோழர்கள் பி. சுப்பிரமணியம், எம். கணேசன், எம். ஐ நூர்முகமது, உ. சையது முகமது. வி. இராஜாராம் ஆகியோர் சங்கத்தின் கடமைகளை விளக்கிப் பேசினர். பின்னர், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் : வி. நாகராசன்; துணைத் தலைவர் : எம். கந்தசாமி, செயலாளர் எம். ஐ. நூர் முகமது பொருளாளர்: கே. அடைக்கலம்; மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக5-பேர் தேர்ந்தெடுக்கப்பட்டபின், தோழர் வி நாகராசன் நன்றி நவின்றார்.

தென்னம்புலம் வள்ளுவர் மன்றம்

மேற்படி மன்ற மூன்றும் ஆண்டு விழா திரு எம். இராஜலிங்கம் தலைமையில் நடைபெற்றது. திரு. கோவை-இளஞ்சேரன் 'நாடும் நாமும்' என்ற தலைப்பில் விரிவுரையாற்றினர்.

கொட்டாரம் பாரதிதாசன் படிப்பகப் பொதுக்கூட்டம்

17—6—56ல், பாரதிதாசன் படிப்பகத்தில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் பி. எ. சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் சு. கந்தசாமி தி மு கழக மாநில மாநாட்டின் முடிவுகளைப் பற்றிப் பேசிய பின், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் தற்கால அரசியல் பற்றியும், திருச்சி மாநாட்டின் முடிவுகளை விளக்கியும் பேசினர்.

'குறிக்கோள்'—நாடகம்

24—6—56 கோவில்பட்டி காந்தி நகர் திடலில் பாண்டியனூர் கலைக் குழுவினர், தோழர் பி. அருணாசலம் தலைமையில் 'குறிக்கோள்' என்னும் நாடகத்தை நடத்தினர்.

பிறப்பு

24—6—56ல், திண்டிவனம் 'இராம விலாஸ்' உணவு விடுதி உரிமையாளர் திரு. வெ. நடராசன் அவர்களின் துணைவியார் தோழியர் குப்பம்மாள் ஓர் ஆண் மகவுக்கு தாயானார். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரு 1 அன்பளிப்பாகத் தரப் பட்டது. வரப்பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்.

மறைவு

வாணியம்பாடி கோணமேடு அண்ணா படிப்பக முன்னாள் செயலாளரும், தி. மு. க. உறுப்பினருமான தோழர் தர்மலிங்கம் அவர்கள் க்ஷயரோகத்தால் தாக்கப்பட்டு இயற்கையெய்தினர். இவரது சடலத்தை கழகக் கொடிகளுடன் கழகத் தோழர்கள் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக வலம் வந்து இடுகாட்டை அடைந்தனர். வாணியம்பாடி தி. மு. க. செயலாளர் வி என். தத்தப்பன், ஆதிமூலம், ஆனந்தன், கோவிந்தராசன், துரைராசன் ஆகியோர் இறுதி மரியாதையை தெரிவித்துக் கொண்டனர். அவரது குடும்பத்தினருக்கு இவ்வூர் தி. மு. கழகம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டது. நமது அனுதாபம் உரித்தாகுக. (ஆ-ர்.)

இரண சிகிச்சை வலியைக் குறைக்க புதிய மருந்து

வாஷிங்டன் ஜுன் 29—

இரண சிகிச்சை காரணமாகவோ, பற்களைப் பிடுங்கியதாலோ ஏற்பட்ட வலியை மறக்கடித்துவிடக்கூடிய 'டோலிட் ரோன்' என்ற புதிய சக்தி வாய்ந்த மருந்தொன்றை அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்!

தங்கம் இருந்தும் தரித்திரம்!

கரும்பு விளைந்தும் வாழ்வில் கசப்பு

இரும்பு கிடைத்தும் இல்லாமை?

தென்னாட்டு மக்களுக்கு இந்த அவலநிலை ஏன்?

தளவாய்புரம் கூட்டத்தில் அண்ணா கேள்வி

"வடநாடு வளர்ந்து கொண்டே போகவும், தென்னாடு தேய்ந்து கொண்டே போவதற்குமான நிலை ஏன் ஏற்பட வேண்டும், நம் நாட்டிற்கு?

"வடநாடு, பிரம்மாண்டமான தொழிற்சாலைகளுக்கு இருப்பிடமாகவும், தென்னாடு வெறும் விவசாயத்தையும், கைத்தறியையும் நம்பிக்கிடக்கவுமான நிலை ஏற்பட வேண்டிய அவசியம் என்ன?

"வடநாட்டார் கொழுக்கிற அளவுக்கு நாம் இளைத்துக் கொண்டே வருகிறோம் என்ற நிலை நமக்கு ஏன் ஏற்பட வேண்டும்?

"நம் நாட்டில் தொழில் வளர, நாடு செழிக்க, நமது வளமும் உழைப்பும் நமக்குப் பயன்பட, நமக்கு நம்மை ஆளும் உரிமை வேண்டும்; நம்மைப் பிறர் ஆளும் நிலை மாற வேண்டும்.

"இதுதான், திராவிட நாடு வேண்டும் என்ற இலட்சியத்தின் அடிப்படை; இந்த இலட்சிய ஈடேற்றத்தில்தான், இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வு அடங்கியிருக்கிறது"

என்று, அண்ணா அவர்கள், தளவாய்புரம் தி. மு. கழகச் சார்பில் 15—6—56 அன்று நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

"உலகில், பல்வேறு நாடுகளில் வாழும் மக்கள் நம்மைவிடக் குறைவாகவே உழைக்கிறார்கள்; ஆனாலும், நம்மைவிட வசதியான நல்வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள். ஏன் அப்படி?

"இங்கிலாந்திலே உள்ள ஒரு தொழிலாளிக்குக் குடியிருக்க சுகாதாரமான வீடு கிடைக்கிறது. அந்த வீட்டில் ஓய்வாக இருக்கும்போது, 'உலகம் என்ன சொல்கிறது?' என்பதைக் கேட்க ரேடியோவும், படித்து அறிய பத்திரிகைகளும் இருக்கின்றன.

"ரஷ்யாவில் உள்ள ஒரு தொழிலாளியின் மனைவி கர்ப்பிணியானால், குழந்தை பிரசவிப்பதற்கு மூன்று மாதம் முன்பிருந்தே—பிரசவித்த மூன்று மாதம்வரை, சர்க்கார் செலவிலேயே மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன.

"இப்படி ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் வாழ்க்கை வசதிகள் கிடைக்கும்போது, நம் நாட்டு மக்களுக்கு இது கிடைக்காமற் போவானேன்?

"நம் நாட்டு மக்கள்தான் மிகக் கடினமாக உழைப்பவர்கள் என்றேன்; அப்படியிருந்தும் அவர்களால் நல்வாழ்க்கையை பெற முடியவில்லை என்றால், ஏன்?

"அல்லது, நாட்டு மக்கள் இத்தனை உழைத்தும் நல்வாழ்வு பெற முடியாமலிருப்பதற்குக் காரணம், 'நாடு வளமற்றதா'? என்றால், அதுவும் இல்லை.

"இதற்கு என்ன காரணம் என்று மதவாதிகளைக் கேட்டோம்—'கோவில் கட்டு—குளம் வெட்டு—காணிக்கை செலுத்து' என்றுதான் அவர்கள் கூறினார்கள்; செய்தோம்; விளைவு, கோவிலும், கோபுரமும், குளமும்தான் மிச்சமாயிற்று; வாழ்வு மட்டும் வளமாகவே இல்லை!

"காங்கிரஸ்காரர்களைக் கேட்டோம்—அவர்கள், 'வெள்ளையன் இந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறான்; அவன் வெளியேற்றப்பட்டுவிட்டால் நாடு சுபீட்சமாகிவிடும்,' என்று கூறினார்கள். அவர்கள் கூறியதைப்போல சுயராஜ்யம் வந்தது; ஆனால், மக்களுக்கு 'சுயராஜ்யம்' வந்ததா என்றால், இல்லை!

"பின் என்னதான் காரணம்? கிணற்றிலிருந்து இறைத்தாலும் தண்ணீர் இறைத்தும், தோட்டம் ஈரமாகக்கூட இல்லை என்றால், என்ன அதற்குப் பொருள்?

"ஒன்று, தோண்டி ஓட்டையாயிருக்க வேண்டும்; அல்லது, வாய்க்கால் நீரை, வேறொருவர், தன் தோட்டத்திற்குத் திருப்பியிருக்க வேண்டும்; அதுதானே?

"அதேபோலத்தான், இந்த நாட்டில் எவ்வளவு வளம் இருந்தும், மக்கள் எவ்வளவு கடினமாக உழைத்தும், வாழ்வு பெற முடியவில்லை என்றால், இந்த நாட்டு மக்களுக்குத் தங்கள் உழைப்பை யார் திருடுகிறார்கள்—தங்கள் நாட்டுச் செல்வத்தை எவரெவர் கொள்ளையிடுகின்றனர் என்பது தெரியவில்லை என்பதுதானே காரணமாக இருக்கமுடியும்?

"இப்படி நாட்டு மக்கள் தங்கள் செல்வம் கொள்ளையிடப்படுவதையும், உழைப்பு திருடப்படுவதையும் அறிய, கல்வியறிவு பெரும் துணை நிற்பதாகும்; இந்தக் கல்வியறிவு நம் நாட்டவரில் மிகப் பெரும்பாலானவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது.

"எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகம், நாட்டு மக்கள் கல்வியறிவு மூலம் பெறக்கூடியவற்றை, அவர்களுக்கு எடுத்துக் கூறிவருகிறது; அவர்கள் பகுத்தறிவு பெற்றவர்களாக ஆக்கப்பட வேண்டும் என்று கழகம் விரும்புகிறது.

"இதற்கு மேலும் கழகம், நம் நாட்டவர் நாம் யார் என்பதைத் தெரிந்துகொண்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறது; நாம் யார் என்பதை மக்களுக்கு எடுத்துச்சொல்லுகிறது.

"நாம் எல்லாம் தமிழர்கள்—தமிழ் மொழி பேசுவதால் என்ற உணர்வு பெற வேண்டும் மக்கள்.

"தெலுங்கர்கள், கன்னடர்கள், மலையாளிகள் ஆகியோரும் தம் தம் மொழி உணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

"இந்தத் தமிழ், மலையாள, கன்னட, தெலுங்கு மொழி பேசுபவர்கள் மொழியால் தமிழர்களாய், மலையாளிகளாய், கன்னடியராய், தெலுங்கராய் இருந்தாலும், 'இனத்தால் திராவிடர்கள்—ஒரே பண்பாடும் பழக்க வழக்கமும், 'நடைநொடி பாவனைகளும் கொண்டவர்கள்—ஒரு வழி வந்தவர்கள் என்ற இன உணர்வும் நாம் பெற்றாக வேண்டும்,' என்று கழகம் கூறுகிறது.

"பூவும் காயும், தண்டும் இலையும் கொண்ட மரம் வாழை மரமாக இருக்கிறது; பூவையும், காயையும், தண்டையும், இலையையும் தனித் தனியாக அழைக்கும்போது, வாழை இலை, வாழைப்பூ, வாழைக் காய், வாழைத்தண்டு என்று அழைக்கிறோம்; மொத்தமாகக் கூறும்போது, வாழை மரம் என்று கூறுகிறோம்.

"இதைப் போலத்தான், காயும், பூவும், இலையும் ஒரே மரத்தின் பாகங்களாவதைப் போலத்தான், தமிழரும், மலையாளிகளும், கன்னடரும், ஆந்திரரும் திராவிட இனத்தின் மொழி வழிப் பிரிவினராவர்.

"இந்த உண்மையை, நமது பள்ளிக்கூடப் பிள்ளைகளும் கூட உணரமுடியும்; வரலாறு கற்றவர்கள் தெரிந்துகொள்ள முடியும்; இலக்கியம் பயின்றவர்கள் புரிந்துகொள்ள முடியும்.

"இந்தத் திராவிட இனமக்கள், இன்று வடநாட்டவருக்கு அடிமைப்பட்டிருப்பதால், தங்கள் செல்வத்தைப் பறிகொடுக்கிறார்கள்; உழைப்பைத் திருடக் கொடுக்கிறார்கள்; உரிமை இழந்து தவிக்கிறார்கள்; இந்த நிலையிலிருந்து திராவிடர் விடுபட வேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

"நிலக்கரியும் சுண்ணாம்பும் மட்டும் வைத்துக் கொண்டிருக்கிற இங்கிலாந்து, திராட்சைக் கொடிகளை மட்டும் வைத்திருக்கிற பிரான்ஸ், பால் பண்ணை நடத்தும் டென்மார்க்—இவை எல்லாம் உலகில் வாழுகின்றன; மக்கள் செழிப்பான வாழ்வு பெற்றிருக்கின்றனர்.

"நெடி தரும் புகையிலையும், தங்கமும், முத்தும், கரும்பும், இரும்பும், கனியும், நெல்லும்—இதர எல்லா வளமும் உடைய நாம் வாழமுடியாது ஏன் தவிக்க வேண்டும்?

"தங்கம் இருக்கும் நம் நாட்டில் தரித்திரம் இருப்பானேன்? முத்துக்கிடக்கிறது கடலில்—நம் வாழ்வில் சத்து ஏதுமின்றி வாடுவானேன்?

"கரும்பு விளைந்தும் நமக்கு வாழ்வு கசப்பாக இருப்பானேன்?

"இரும்பும், இன்னபிற கனிப் பொருளும் கிடைத்தும், இல்லாமையில் நாட்டவர் இடர்படுவானேன்?

"இவற்றை அனுபவிக்கிற—ஆளுகிற உரிமை நம்மிடம் இல்லை என்பதால்தானே!

"விருதுநகரில் ஒரு தொழிற்சாலை துவக்கவேண்டுமானால் டில்லியின் உத்தரவு பெறவேண்டும் என்ற நிலை இருக்கிறதே! 'காமராசர் ஆளுகிறார்' என்று பெயரே தவிர, சூத்திரக் கயிறு டில்லியிடம்தானே இருக்கிறது? 1947-க்குப் பிறகு ஏற்பட்ட நிலையினால், பொம்மலாட்டத்தில் வரும் பொம்மைகள்போல, டில்லி ஆட்டுவிக்கிறபடி எல்லாம் ஆடுகிற பொம்மைகளாகத் தானே 'காமராசர்கள்' இருக்க வேண்டியுள்ளது?

"தாங்களாக நாட்டவரின் நலம் பேண ஏதேனும் காரியங்களைச் செய்ய அதிகாரம் படைத்திருக்கவில்லையே, இங்குள்ள மக்கள்?

"மக்களின் நலம் பேண என்று டெல்லி ஏதேனும் திட்டங்கள் தீட்டினால், அது அத்தனையும் வடநாட்டிற்குத் தானே பயன்படுகிறது?

"முதல் ஐந்தாண்டுத் திட்டமாவது ஒழியட்டும்—பழைய கதை என்போம்!

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு எவ்வளவு பங்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது?

"'சுதேசமித்திரன்' படம் போட்டுக் கேட்டிருக்கிறதே—'அட அசடே! காலுக்கு பலம் வேண்டாமா?'—என்று!

"இந்தப் படத்தைப் பார்த்த பின்பாவது, காங்கிரசாருக்கு சூடு ஏற்பட வேண்டாமா? உணர்ச்சி பிறக்க வேண்டாமா?"

ஒத்திவைப்பு

"வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு படிப்பக நான்காம் ஆண்டுவிழா 1-7-56-ல் நடைபெற வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்து, சுவரொட்டி விளம்பரமும், துண்டு அறிக்கைகளும் வெளியிடப்பட்டிருந்தது; திடீரென்று சென்னை சர்க்கார் போலீஸ் இலாகாவினர் 30-6-56 மாலை கூட்டத்திற்கு அனுமதி தர மறுத்துவிட்டனர்; நாங்கள் ஒருவாரத்திற்கு முன்னமேயே அனுமதி கேட்டு இருந்தும் அப்படிச் செய்தனர்; ஆகவே மேற்படி ஆண்டு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது; தேதி பின்னர் அறிவிக்கப்படும்,"

என்று, படிப்பகச் செயலாளர் செ. பாண்டியன் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

★

தேனி
கிழக்குச் சந்தை
4—7—56 இரவு 7 மணிக்கு
தலைவர்:
கே. பி. பி. எம். நாராயணசாமி
பேசுவோர்:
கோவை-செழியன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
இராமசாமி

தமிழ் நாடு மாநில மருத்துவர் மத்திய சங்கம்

3—7—56 மாலை 3-மணிக்கு மேற்படி சங்க வரவேற்பு கமிட்டிக் கூட்டம், திருப்பள்ளித் தெரு, சென்னை-1 (தொண்டை மண்டல உயர்நிலைப் பள்ளி எதிரில்) எண் 6-ல் நடைபெறும்.

முகவரி மாற்றம்

ப. புகழேந்தி,
தி. மு. க தலைமை நிலையம்,
'அறிவகம்',
இராயபுரம், சென்னை-13.

அப்துல் கபார்கான் மீது மற்றுமோர் வழக்கு?

கராச்சி, ஜூலை 1—

கான் அப்துல் கபார்கான்மீது மற்றொரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக 'டான்' பத்திரிகை அறிவித்துள்ளதாம்.

அமெரிக்காவில் மிகப் பெரிய வேலை நிறுத்தம்!

இரும்பு உருக்குத் தொழிலில் ஈடுபட்டுள்ள 6,50,000 பேர் பங்கேற்றுள்ளனர்!

பிட்டிஸ்பர்க், ஜூலை 1—

அமெரிக்காவில், சுமார் 6,50,000 உருக்கு—இரும்பு தொழிலாளர்கள் நேற்று இரவு முதல் வேலைநிறுத்தம் செய்திருப்பதின் மூலம், அமெரிக்காவின் மிகப்பெரிய தொழிலான இரும்பு உருக்குத் தொழில் நிலைகுலைந்து போய்விட்டதாகத் தெரியவருகிறது.

தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும்—முதலாளிகளுக்கும் இடையே நேற்றுடன் முடிகிற ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதை ஒட்டி நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றதின் விளைவாகவே இந்த வேலைநிறுத்தம் துவங்கியுள்ளதாம்.

இந்த வேலை நிறுத்தம் சீக்கிரமே முடிவுற்றாலும்கூட, பல இலட்சம் டாலர் பெறுமான இரும்பு-உருக்கு உற்பத்தி பாழாவதைத் தடுக்க முடியாதென்றும், மறுபடியும், இந்தத் தொழில் பழைய வேகத்தில் நடைபெற வேண்டுமானால் ஒரு மாத காலமாகும் என்றும் கூறப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு, ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்தால் இரட்டைச் சம்பளம் தரவேண்டும் என்றும், வேலையில்லாத காலத்தில் 'படி' தரவேண்டும் என்றும் பல கோரிக்கைகள் எழுப்பப்பட்டன என்றும், இதற்கு இணங்க தொழிலதிபர்கள் மறுத்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

பட்டுத் துணி விலை ஏறும்?

புதுடில்லி, ஜூலை 1—

செயற்கைப் பட்டு, கம்பளித் துணி இறக்குமதியைக் குறைப்பதென்கிற இந்திய சர்க்காரின் புதிய இறக்குமதிக் கொள்கையின் பலனாக, சிறிது காலம்வரை மேற்குறிப்பிட்ட துணிகளின் விலை ஏறக்கூடும் எனத் தெரிகிறது. என்றாலும், உள்நாட்டுக் கம்பளி, செயற்கைப் பட்டுத் தொழில் துறையினர் இந்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு பெருமளவுக்கு உற்பத்திச் செய்வார்களேயானால், விலைகள் குறையலாமென்றும், முன்னரே இவ்வகை துணிகள் உற்பத்தி அதிகரித்து வருகிறதென்றும், அதன் பலனாக கம்பளித் துணிகளை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன வென்றும் கூறப்பட்டுள்ளது.

நடுவானத்தில் இரு விமானங்கள் மோதின?

128 பேர் பலியாயினர்?

வின்ஸ்லோ (அரிசோனா) ஜூலை 1—

அமெரிக்காவின் சிவில் விமானப் போக்குவரத்தின் சரித்திரத்திலேயே மிகப் பெரியதோர் விமான விபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

பிரயாணிகளும் விமானிகளுமாக மொத்தம் 128 பேரை ஏற்றிக்கொண்டு சென்ற இரண்டு விமானங்கள் நடுவானத்தில் மோதிக்கொண்டு கீழே விழுந்து நொறுங்கிச் சிதறிவிட்டதாகவும், 128 பேர்களும் இறந்துவிட்டதாகவே கருதப்படுவதாகவும் யூகிக்கப்படுகிறதாம்!

லாஸ் ஏஞ்செல்ஸிலிருந்து புறப்பட்ட இந்த இரு விமானங்களும், சாதாரணமாக ஏறிச் செல்ல முடியாத குன்றுகளின்மீது கிடப்பதாக விமானிகள் கூறுகின்றனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.